**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 04-08-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-08-04 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-08-05 | 2023-08-06 | 2023-08-07 | 2023-08-08 | 2023-08-09 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 2.0 | 1.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 39.0 | 38.0 | 38.0 | 37.0 | 37.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 27.0 | 26.0 | 26.0 | 25.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 70 | 60 | 70 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 18 | 10 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை (கோணம்) | 320 | 320 | 320 | 290 | 290 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 6 | 8 | 7 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலைக்கு வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 37.0°C - 39.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை26 0°C - 27.0°Cஇருக்கும். வானம் பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 10 -18 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

| |
|---|
| விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : ஆகஸ்ட் 11 முதல் ஆகஸ்ட் 17 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்புக்கு மேல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| தென்னை விவசாயிகள் குரும்பை கொட்டுவதை தவிர்த்து நல்ல மகசூல் பெற மரம் ஒன்றிற்கு 200 மிலி தென்னை டானிக்கை வேரில் வருடத்திற்கு இரண்டு முறை கட்டவேண்டும் . |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வாழை | காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்கள் மரங்களை மூங்கில் கம்புகளால் முட்டுக்கொடுக்கவும் . தற்போது வாழை சாகுபடி செய்து இருக்கும் விவசாயிகள் ஏக்கருக்கு 8 கிலோ தட்டை பயிர் ஊடுபயிராக சாகுபடி செய்து 50 % பூக்கும் தருணத்தில் மடக்கி மண்ணில் உழும்போது மண் வளம் மேம்படும் களைகள் கட்டுப்படும் மழை நீர் சேமிக்கப்படும். |
| தென்னை | தென்னையில் போரான் பற்றாக்குறை யினால் ஏற்படும் குரும்பை உதிர்வதை தடுக்க போராக்ஸ் என்ற உரத்தினை ஒரு மரத்திற்கு 50 கிராம் என்ற அளவில் மணல் அல்லது எருவுடன் கலந்து இடவும் . |
| கத்திரிக்காய் | தற்போது நிலவும் பருவநிலையில் கத்தரியில் இலைப்புள்ளி நோய் தாக்குதல் தென்படுகின்றது. கத்திரிபயிரில் பருவமழைக் காலங்களில் வானம் மேக மூட்டத்துடன் இருக்கும் சமயங்களில் இலைப்புள்ளி நோய் அதிகமாகக் காணப்படும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருணீக்கு 2 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு அல்லது 2½ கிராம் ஜினெப் என்ற அளவில் ஏதேனும் ஒன்றை கலந்து தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை வளர்ப்பில் மிக முக்கியமாக பிறந்த கன்றுகளுக்கு பசுவின் சீம்பால் மிகவும் அவசியமாகும். புதிதாகப் பிறந்த |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | கன்றுக்கு, முதல் மூன்று நாட்களுக்கு, தவறாமல் பசுவின் சீம்பால் ஊட்ட வேண்டும். ஒரு நாளைக்கு 2 முறை சீம்பால் கொடுக்கலாம். கன்றுக்குட்டி பலவீனவீமாக இருந்தால், ஒரு நாளைக்கு 3 முறை சீம்பால் கொடுக்கலாம். இது கன்றுக்குட்டியின் உடல் வெப்பநிலையை சூடாக வைத்திருக்கவும் ஆரோக்கியமான வளர்ச்சியை ஊக்குவிக்கவும் செய்கிறது. பசு மாடுகளுக்கு நீர்த்த சுண்ணாம்பு சத்துள்ள நீர் 75 மில்லி அளவு தினமும் அடர் தீவனம் நீர் கலவையில் கலந்து குடிக்க கொடுத்து பால் உற்பத்தி அதிகரிக்கலாம். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | கோழிகளைத் தாக்கும் கழிச்சல் நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. நோய் தாக்கப்பட்ட கோழிகளை தனியாக பிரித்து வைத்து பராமரிக்க வேண்டும். பின் நோய் பாதிக்கப்பட்ட மற்றும் நோய் பாதிக்கப்படாத கோழி மற்றும் குஞ்சுகளுக்கு 1 லிட்டர் தண்ணீரிணீல் 2கிராம் மைக்ரசால் பவுடர் அல்லது 2கிராம் பேக்டிரிசால் பவுடர் மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் 5 மில்லி வைம்ரால்சிரப் இரண்டையும் கலந்து அனைத்து கோழிகளுக்கும் 5 நாட்களுக்கு காலை மாலை என 2 வேளை குடிக்க கொடுக்க வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரைக்க ப்பட்ட வானிலை சார்ந்த வேளாண் செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்து மாறு கேட்டுக்கொ ள்ளப்படுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| பொது ஆலோசனை | காய்கறிகள் விதைக்கும் பருவமாதால் விவசாயிகள் விதையுடன் 1 கிலோவிற்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பு நாற்றழுகல் நோய் வராமல் தவிர்க்கலாம் . |
| பொது ஆலோசனை | ஆடிப்பட்ட மானாவாரியில் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் தரமான விதைகளை விதைப்பதற்கு ஒரு நாள் முன்பாக ஒரு |

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | சதவீத பொட்டாசியம் குளோரைடு கரைசலை 6 மணி நேரம் ஊற வைத்த பின் நிழலில் 16 மணி நேரம் உலர விட்டு விதைப்பை மேற்கொள்ளும் பொழுது விதை கடினத்தன்மையுடன் போதுமான ஈரம் மண்ணில் கிடைத்த பின்பு முளைத்த வளரும் தன்மை பெறும். இவ்விதை கடினப்படுத்துதல் நேர்த்தி மூலம் சீரான முளைப்பு திறனையும் , வளர்சசியையும் இளம் நாற்றுக்கள் பெறுவதோடு வீரிய நாற்றுக்கள் பெறுவதோடு வீரிய நாற்றுகளாக உருவெடுக்கும் . |